**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**

**முன்னிலை: சு. அபூர்வா, பி.ஏ., எல்.எல்.பி.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.**

**2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29–ஆம் நாள் புதன்கிழமை**

**அ.வ.எண்.63/2024**

**(CNR No.TNDG08-000085-2024)**

மணிமாறன் ....வாதி

**/எதிர்/**

ஜெய்லானி ....பிரதிவாதி

இந்த வழக்கானது கடந்த 19.07.2024–ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக கடந்த 21.07.2026–ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு.சி.இராமமூர்த்தி,** அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.**M.மகேஸ்வரி,** அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இரு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்புரை</u>**

வழக்கு தொகை ரூ.45,966/–ம், அசல் ரூ.35,000/–க்கு வழக்கு தேதி முதல் 12% பின்வட்டியும் இவ்வழக்கு செலவுத்தொகையும் சேர்த்து வாதிக்கு பிரதிவாதி செலுத்தி வைக்க வேண்டும் என்று வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



APOORVA S Digitally signed by APOORVA S
Date: 2026.07.29 17:28:24 +0530

**2. வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் :**

வாதியிடமிருந்து பிரதிவாதி அவசர நிமித்தம் குடும்ப செலவிற்காகவும், மருத்துவ செலவிற்காகவும் கடந்த 20.11.2021-ம் தேதியில் கடனாக ரொக்கம் ரூ.35,000/-(ரூபாய் முப்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) பெற்றுள்ளார் என்றும், மேற்படி கடன் பொறுப்பிற்காக மேற்படி தேதியில் பிரதிவாதி வாதிக்கு ஒரு கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்துள்ளார் என்றும், மேற்படி கடன் தொகை ரூ.35,000/-க்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் செலுத்துவதாகவும் ஒப்புக்கொண்டு மேற்படி பிராமிசரி நோட்டில் கையெழுத்து செய்துள்ளார் என்றும், ஆனால் நாளது தேதி வரை மேற்படி கடன் தொகைக்குண்டான வட்டியோ அசலோ பிரதிவாதியால் வாதி வசம் செலுத்தி வைக்கப்படவில்லை என்றும், மேற்படி பிரதிவாதி இதுநாள் வரை யாதொரு தொகையும் செலுத்தி வைக்கவில்லை என்றும், பிரதிவாதி வாதிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை அசல், வட்டி வகையறாவை செலுத்தாமல் வீண்காலம் கடத்தி வருகிறார் என்றும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. பிரதிவாதி தரப்பு எதிருரையின் சுருக்கம்:**

வாதியிடம், பிரதிவாதி தன்னுடைய அவசர நிமித்தம், குடும்பச்சொலவுக்காகவும், மருத்துவச் செலவிற்காகவும், கடந்த 20.11.2021-ம் தேதியில் ரூ.35,000/- (முப்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) கடனாக பெற்றுக்கொண்டு, மேற்சொன்ன கடன் தொகைக்கு மாதம் 1-க்கு ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் சேர்த்து வட்டியும் அசல் தொகையையும் வாதி வேண்டும் பொழுது செலுத்தி வைப்பதாக உறுதி கூறி கடந்த 20.11.2021-ம் தேதி வாதிக்கு பிரதிவாதி ஒரு கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுத்துள்ளார் என கூறியிருப்பது முற்றிலும் பொய் என்றும், மேற்படி வாதியிடம் எந்தகால கட்டத்திலும் கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுத்து பிரதிவாதி கடன் பெறவில்லை என்றும், உண்மையில் தாவா



APOORVA S Digitally signed by APOORVA S
Date: 2026.07.29 17:28:31 +0530

கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றும், மேற்படி தாவா கடனுறுதிச்சீட்டு போர்ஜரியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றும், வாதியை, பிரதிவாதிக்கு யார் என்று தெரியாது என்றும், எந்த காலகட்டத்திலும் வாதியிடம் பிரதிவாதி எந்த தொகையையும் கடனாக பெறவில்லை என்றும், கடனுறுதிச்சீட்டில் உள்ள சாட்சிகளை வாதியே தயார் செய்து அவருக்கு ஆதரவாக சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றும், மேற்படி வாதி கெட்ட எண்ணத்தில் பிரதிவாதியின் கையெழுத்தை மோசடியாகவும், பொய் சாட்சிகளை கொண்டு கடனுறுதிச்சீட்டு உற்பத்தி செய்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே வாதி தாக்கல் செய்துள்ள இந்த அசல் வழக்கை பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளார்.

**4. வழக்குரை, எதிர்வழக்குரை, மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.**

i) வழக்கு கடனுறுதிச்சீட்டை வாதிக்கு, பிரதிவாதி ஏற்படுத்திக் கொடுத்தாரா ?

ii) வழக்கு கடனுறுதிச்சீட்டிற்குரிய அசல் மற்றும் வட்டித் தொகைகளையும், வழக்கு தேதி முதல் பின்வட்டியையும் வாதிக்கு, பிரதிவாதியை செலுத்த உத்தரவிட வேண்டும் என்று கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா ?

iii) வழக்கின் செலவுத் தொகையை வாதிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா ?

iv) வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் என்ன ?



APOORVA S Digitally signed by APOORVA S Date: 2026.07.29 17:28:39 +0530

**5. சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் :**

இவ்வழக்கில், வாதி மணிமாறன் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக வா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் கூடுதல் சாட்சியாக வெற்றிவேல் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டார். அவர் மூலமாக சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அத்துடன் வாதி தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் ஜெய்லானி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. எழுவினா எண்.1 முதல் 3–க்கான தீர்வு:**

**வழக்கு கடனுறுதிச்சீட்டை வாதிக்கு, பிரதிவாதி ஏற்படுத்திக் கொடுத்தாரா ?**

**வழக்கு கடனுறுதிச்சீட்டிற்குரிய அசல் மற்றும் வட்டித் தொகைகளையும், வழக்கு தேதி முதல் பின்வட்டியையும் வாதிக்கு, பிரதிவாதியை செலுத்த உத்தரவிட வேண்டும் என்று கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா ?**

**வழக்கின் செலவுத் தொகையை வாதிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா ?**

6.1. வாதிக்கு தாவா தொகையான ரூ.45,966/–ம் பிராமிசரி நோட்டின் அசல் தொகை ரூ.35,000/–க்கு பிராது தேதி முதல் 12% வீதம் பின்வட்டியுடன் பிரதிவாதி செலுத்தி வைக்கும்படி உத்தரவிட வேண்டும் என்றும் மற்றும் செலவு தொகைக்காகவும் வாதியால் இவ்வழக்குத் தாக்கல் செய்யப்படுகிறது. இரு தரப்பு வாதம் கவனமாக கேட்கப்பட்டது. இரு தரப்பு சாட்சியங்களும், சான்றாவணங்களும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டன. வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.1 பிராதை தழுவி சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தை உறுதிப்படுத்த வாதி தரப்பில் கடந்த 20.11.2021–ஆம் தேதியிட்ட கடனுறுதிச்சீட்டு வா.சா.ஆ.1–ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1– தனது குறுக்கு விசாரணையில் தனது வழக்கை மறுக்கவில்லை.



APOORVA S Digitally signed by APOORVA S Date: 2026.07.29 17:28:45 +0530

6.2. இவ்வழக்கில் வாதி தரப்பில் கூடுதல் சாட்சியாக வா.சா.ஆ.1–ல் சாட்சி கையெழுத்திட்ட வெற்றிவேல் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.2 தனது சாட்சியத்தில் **"பிரதிவாதி கடந்த 20.11.2021–ம் தேதி வாதியின் வீட்டில் வைத்து ரூ.35,000/–ஐ கடனாக பெற்றுக்கொண்டார். அதற்கு பொறுப்பிற்காக தாவா கடனுறுதிச்சீட்டில் பிரதிவாதி என் முன்னிலையிலும் எழுதியதும், சாட்சியமானதும் முன்னிலையிலும், கையொப்போம் செய்து கொடுத்தார், அதன் பின்னிட்டு மேற்படி கடனுறுதிச்சீட்டில் நான் சாட்சியாக கையொப்போம் செய்து கொடுத்தேன்".** என்று சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.2–ம் தனது குறுக்கு விசாரணையில் வாதியின் வழக்கை மறுத்து சாட்சியம் அளிக்கவில்லை. பிரதிவாதி தரப்பில், பிரதிவாதி பி.வா.சா.1– ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பி.வா.சா.1–ன் மூலம் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யவில்லை. பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், **"தாவா கடனுறுதிச்சீட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை என்பதை நிரூபிக்க கையெழுத்து நிபுணரிடம் ஆய்வு நடவடிக்கை ஏதும் எடுத்தேன் என்றால் இல்லை. கடனுறுதிச்சீட்டு மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று வாதி மீதோ அல்லது சாட்சிகள் மீதோ காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுத்தேனா என்றால் இல்லை."** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.3. இருதரப்பிலும் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்ததில், வாதியிடம், பிரதிவாதி கடந்த 20.11.2021–ஆம் தேதியன்று கடனாக ரூ.35,000/– ரொக்கம் பெற்றுக்கொண்டு, அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு வட்டி ரூ.1.00 வீதம் சேர்த்து வட்டியும் முதலும் செலுத்துவதாக ஒப்புக்கொண்டு தாவா கடனுறுதிச்சீட்டை எழுதி கையொப்பமிட்டு வாதியிடம் கொடுத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. பிரதிவாதி தரப்பில், பிரதிவாதி வாதியிடம் வா.சா.ஆ.1–ன் மூலம் கடன் பெறவில்லை என்றும், தாவா கடனுறுதிச்சீட்டு வாதியால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்று எதிர்வாதம் செய்யப்பட்ட நிலையில், மேற்படி வா.சா.ஆ.1 ஆனது மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம்



APOORVA S
Digitally signed by APOORVA S
Date: 2026.07.29 17:28:59 +0530

என்பதையும் வா.சா.ஆ.1–ல் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்போம் இல்லை என்பதையும் நிரூபிக்கும் பொறுப்பு பிரதிவாதியிடமே உள்ளது.

6.4. மேற்படி வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 சான்றாவணம் மூலமும் வா.சா.1 மற்றும் வா.சா.2 ஆகியோரின் சாட்சியத்தின் மூலமும் வாதி தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில், எதிர்வழக்குரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை நிரூபிக்க எவ்வித சாட்சிய, சான்றாவணங்களை முன்னிலைப்படுத்தவோ இல்லை. வாதி தனது தரப்பு வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் வழக்கு கடனுறுதிச்சீட்டை வாதிக்கு பிரதிவாதி ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்பதை வாதி நிரூபணம் செய்துள்ளார் என்றும் எனவே, தாவா தொகை ரூ.45,966/–ம், அசல் தொகை ரூ.35,000/–க்கு பின்வட்டி மற்றும் தாவா செலவு தொகையை வாதிக்கு, பிரதிவாதி செலுத்தி வைக்க கடமைப்பட்டுள்ளார் என்றும் இந்த நீதிமன்றம் முடிவு செய்து எழுவினா எண்.1 முதல் 3–க்கு தீர்வு காணப்படுகிறது.

<u>7. எழுவினா எண்.4–க்கான தீர்வு:</u>

எழுவினா எண்.1–க்கான தீர்வு வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டதால், வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு தரப்பினர்களுக்கு இதர பரிகாரங்கள் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து எழுவினா எண்.4–க்கு தீர்வு காணப்படுகிறது.

**8. இறுதியாக,** இவ்வழக்கு அனுமதிக்கப்படுகிறது. வாதிக்கு, பிரதிவாதி தாவா தொகை ரூ.45,966/– மற்றும் அசல் தொகை ரூ.35,000/–க்கு தாவா தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரை ஆண்டொன்றுக்கு 9% வட்டியும், தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை ஆண்டொன்றுக்கு



APOORVA S Digitally signed by APOORVA S Date: 2026.07.29 17:29:06 +0530

6% பின் வட்டியுடன் தாவா செலவு தொகையையும் சேர்த்து செலுத்தி வைக்க வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026 ஆம் வருடம் ஜூலை மாதம் 29 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

APOORVA S Digitally signed by APOORVA S Date: 2026.07.29 17:29:12 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**பழனி.**

**<u>வாதி தரப்பு சாட்சிகள் :–</u>**

வா.சா.1 – திரு. மணிமாறன்

வா.சா.2 – திரு. வெற்றிவேல்

**<u>வாதி தரப்பு சான்றாவணம் :–</u>**

| வ.எண். | தேதி | விபரம் | தன்மை |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 20.11.2021 | வாதிக்கு பிரதிவாதி ரூ.35,000/–க்கு எழுதிக்கொடுத்த பிராமிசரி நோட்டு. | அசல் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சியம் :</u>**

திரு. ஜெய்லானி – பி.வா.சா.1

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை.**

APOORVA S Digitally signed by APOORVA S Date: 2026.07.29 17:29:20 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**பழனி.**

மாவட்ட உரிமையியல்

நீதிமன்றம், பழனி.

அ.வ.எண்.63/2024

_________தீர்ப்புரை

நாள் – 29.07.2026

தெளிவு/வரைவு